# ஐந்து வருட ஐஐடி வாழ்க்கை

அறுபதில் படிக்கையில் யாருக்கு தெரியும்
ஐஐடி விருட்சகம் விஸ்வரூபமாய் விரிவாகும்
நுழைவுத் தேர்வை எதிர்கொண்டோம் இளமையில்
கோச்சிங் இல்லாததால் பரீட்சைக்கு பயமில்லை

தேர்வுற்ற பெருமிதம் நீடிக்கவில்லை நெடுநாள்
எங்கே படிக்கிறாய் யாராவது கேட்டால்
ஐஐடி பதில் யாருக்கும் புரியவில்லை
ஐடிஐயா தப்பர்த்தம் கொள்வர் சிலர்
கிண்டி காலேஜா சொல்லி செல்வர் பலர்

காவேரி கிருஷ்ணா நர்மதா தப்தி
மாணவர் விடுதிகளுக்கு நதிகளின் நாமங்கள்
விஷயம் தெரியாதவர் எள்ளி நகைப்பர்
சூட்சமம் தெரிந்தவர் சொல்வர் விளக்கம்
நதி என்றும் ஓடாது ஓடுவதெல்லாம் நதியின் நீரே
அசையாத விடுதியில் வருவர் போவர் மாணவர் மட்டும்

ஓடும் பேருந்துகளுக்கு மலைகளின் பெயர்கள்
இதற்கும் அர்த்தமுண்டு உன்னித்து பார்த்தால்
பூமியோடு சுழன்றாலும் வேகம் உணர்வதில்லை மலைகள்
ஐஐடி பேருந்து அளிக்கும் அதிர்வில்லா சொகுசு பயணம்

| | | | |
|---|---|---|---|
| முதல் வாரம் | வகுப்பறை | மறு வாரம் | தொழில் பட்டறை |
| இப்படி | தொடங்கியது | ஐஐடி | வாழ்க்கை |
| காக்கி உடை | கொடுத்தது | தொழிலாளி | அவதாரம் |
| ஐந்து வருடமும் | அனுபவிக்க | பஞ்சமில்லை | நேரம் |
| | | | |
| இன்பமும் | துன்பமும் | மாறிவரும் | தத்துவம் |
| அன்றே | உணர்ந்தோம் | ஐஐடி | வாழ்க்கையில் |
| திரைப்படத்திற்கு | ஏங்குவோம் | ஞாயிறன்று | மாலை |
| தேர்வுகள் | எதிர்கொள்ளும் | சனியன்று | காலை |
| படித்த பாடத்தில் | எதில் கேள்வி | எதிர்நோக்குவர் | மற்றவர் |
| எந்த பாடத்தில் | பரீட்சை | புரியாமல் தவிப்பர் | ஐஐடி மாணவர் |
| | | | |
| கஷ்டங்களை | மறக்க | காமன் ரூம் | அருமருந்து |
| கேட்பதற்கு | பாடல் | படிப்பதற்கு | பத்திரிகைகள் |
| விடுதி சாப்பாடு | கடின பாடங்கள் | எல்லாம் | கடந்து |
| பட்டமளிப்பு | விழாவில் | பெற்றோம் | பெருமிதம் |
| | | | |
| பல்வேறு | துறைகளில் | திறம்பட | உழைத்தாலும் |
| ஐஐடிபெருமையை | பரப்பியது | அமெரிக்க | ஐடி புரட்சியே |
| ஐஐடியில் | படித்தால் | சாதனையாளராகலாம் | அன்று |
| ஐஐடியில் | நுழைவதே | சாதனை | இன்று |